அனுப்புநர் :
R. கிருஷ்ணமூர்த்தி, பி.இ.,
நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர்,
செங்கல்பட்டு மண்டலம்,
124, ஜி.எஸ்.டி.ரோடு, செங்கல்பட்டு – 1.
Email : ddcglregion@gmail.com

பெறுநர் :
தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர்,
பெருங்கோழி கிராமம்,
உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம்,
உத்திரமேரூர் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

**ந.க.எண். 1803 /2017 செம3 நாள் :11 .10.2018**

அய்யா,

பொருள் : குடியிருப்பு மனைப்பிரிவு - நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம், செங்கல்பட்டு மண்டலம், செங்கல்பட்டு – காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம், பெருங்கோழி ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்: 210/1A,1B1; 211/5,6,7,8A,8B,8C,8D,9; 215/1,2,3; 216/1B; 217-ல் 9.48 ஏக்கர் பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :
1. மனுதாரர் திருமதி.எம்.வசந்தலட்சுமி, அவர்களின் கடிதம் மற்றும் இணைப்புகள் நாள். 21.12.2015.
2. நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 14619/ 1988/பிசி, நாள்.27.04.1988
3. மனுதாரர் திருமதி.எம்.வசந்தலட்சுமி, அவர்களின் கடிதம் மற்றும் இணைப்புகள் நாள். 07.08.2018. (சாலைகள் மற்றும் பூங்கா ஒப்படைக்கப்பட்ட விவரம்)
3. நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 40483/ 2000/ எல்ஏ1, நாள்.07.11.2002
4. நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 16985/ 2000/எல்ஏ2, நாள்.29.09.2007.
5. அரசாணை எண்.71, ஊரக வளார்ச்சித் துறை நாள்: 16.06.2003.
6. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை நக.எண். 12544/2014/சிபி, நாள்.04.07.2014.
7. நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர் அவர்களின் கடிதம் இதே எண் நாள்.04.10.2018. (நன்னிலைவரி செலுத்தக் கோரியது)
8. மனுதாரர் திருமதி.எம்.வசந்தலட்சுமி, அவர்களின் கடிதம் (ம) இணைப்புகள் நாள். 04.10.2018. (நன்னிலைவரி செலுத்திய விவரம்)
9. அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, ந..வ.4(3) நாள்.04.05.2017

---------------

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம், பெருங்கோழி ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்: 210/1A,1B1; 211/5,6,7,8A,8B, 8C,8D,9; 215/1,2,3; 216/1B; 217-ல் 9.48 ஏக்கர் பரப்பில் உத்தேசிக்கப்பட்டுள்ள குடியிருப்பு மனைப்பிரிவு வரைபட ஒப்புதலுக்காக பார்வை(1)ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட உத்தரவு வழங்கப்படுகிறது.

VIGNESH REAL ESTATES
M. V
M. Mani
PARTNERS

Scanned by CamScanner

1. இம்மனைப்பிரிவிற்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட உத்தேச மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ./ந.ஊ.து.இ(செம)எண்.870/2018 என எண்ணிடப்பட்டு இரண்டு வரைபடங்கள் மேல்நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.
2. மேலும் பார்வை 3,4(ம) 5-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி தொடர்நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.
3. பார்வை(6)ல் சுட்டியுள்ள அரசாணையின்படி சாலையை மனுதாரரரிடமிருந்து தானபத்திரம் மூலம் பெற்றும், சாலைகள், குடிநீர், தெரு விளக்குகள் மற்றும் வடிகால் வசதிகளை செய்து மனைப்பிரிவு முழுமையாக அபிவிருத்தி செய்து அதனை உள்ளாட்சிக்கு ஒப்படைத்த பின்னரும், மேலும் மேற்கண்ட அரசாணையில் கண்டுள்ள இதர நடைமுறைகளை பின்பற்றியும் மன்றத்தின் அனுமதி பெற்றும் இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனை 19(இ), 19(உ) குறித்து உறுதி செய்த பின்னரே ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.
4. மனைப்பிரிவிற்கு ஊராட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண். 19(ஈ)ன்படி இவ்வுத்தரவின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.
5. "The Land ownership is the responsibility of the Local Authority, as per the G.O. Ms. No. 71 RDLA dated 16.06.2003 and this Technical approval for the layout is accorded based on the Land Ownership Certificate furnished by the Executive Authority.
6. பார்வை(3)ல் கண்ட கடிதம் மூலம் பெறப்பட்ட இணைப்புகளில் உள்ளவாறு, உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய்த்துறை, சர்வே எண். உட்பிரிவுகள் செய்து அதற்கான விபரங்கள் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
7. பார்வை 7-ல் கண்ட கடிதம் மூலம் நன்னிலைவரி கோரப்பட்டு பார்வை(8)ல் கண்ட மனுதாரரின் கடிதம் மூலம் நன்னிலை வரி ரூ.50,100/- செலுத்தப்பட்டதற்கான விபரம் பெறப்பட்டுள்ளது.
8. உத்தேச மனைப்பிரிவில் அமையும் மனைப்பிரிவு சாலையை ஊராட்சியால் தெரிவிக்கப்படும் சாலையின் அகலம், அதன் உயரம் மற்றும் தரத்திற்கு அமைக்கப்பட்டுள்ளதா? என்பதை சம்மந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களால் ஆய்வு செய்து சாலையின் நிலை குறித்த தகுதிச் சான்று பெறப்பட்ட பின்னரே ஊராட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
9. EWS மனைகள் 165 ( 31 முதல் 45 வரை மற்றும 83 முதல் 102 வரை EWS மனைகள் ஆகும்) ஆகியவை பொருளாதாரத்தால் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஆகும். இம்மனைகளை ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது.

VIGNESH REAL ESTATES
M. Mani
PARTNER

VIGNESH REAL ESTATES
M. V
PARTNER

...3

Scanned by CamScanner

சிறப்பு நிபந்தனைகள் :

1. பார்வை(6)ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12544/14/சிபி, நாள்:04.07.14ன்படி "நகர் ஊரமைப்புத்துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகாரப் பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல".

2. பார்வை(9)ல் காணும் அரசாணை (Ms) எண். 79 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை ந.வ.4(3) நாள் : 04.5.17-ல்

   a. இனம் 3-ன்படி மேற்படி மனைக்கு ரூ.1000/- கூராய்வு கட்டணமாக பெறப்பட வேண்டும்.

   b. இனம் (9)-ன்படி "use conversion charge at the rate of 3% of the market value fixed under section 47-AA of the Indian Stamp Act, 1899 (Central Act 2 of 1899) and deposit the amount in Government head of account and grant permission carrying out the development" என தெரிவிக்கப்பட்டுள்ளதால், மேற்படி மனைப்பிரிவின் பரப்பிற்கு சந்தை மதிப்புப்படி (market value of land) 3% தொகையினை அரசுக் கணக்கில் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

   **Head of Account :**

   "0217 Urban Development - 60 other Urban Development Schemes - 800 other Receipts, AS Receipts under Land Use Conversion Charges" -27 Non Taxation Fees - 09 (DPC : 0217-60-800-AS 2790)"

நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர்,
செங்கல்பட்டு மண்டலம்,
செங்கல்பட்டு.

12.3.18

இணைப்பு : மனைப்பிரிவு வரைபடம் மற்றும் நிபந்தனைகள் (இரண்டு நகல்கள்)

VIGNESH REAL ESTATES
M. Mani
PARTNERS

VIGNESH REAL ESTATES
PARTNER



Scanned by CamScanner

அனுப்புநர் :

ரா. கிருஷ்ணமூர்த்தி, பி.இ.,
நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர்
செங்கல்பட்டு மண்டலம்,
124, ஜி.எஸ்.டி.ரோடு,
நகராட்சி வணிக வளாகம், செங்கல்பட்டு – 1.
Email : ddcglregion@gmail.com

பெறுநர் :

திருமதி.எம்.வசந்தலட்சுமி,
புதிய எண்:18, பழைய எண்:5/1,
பேராசிரியர் சுப்பிரமணியன் தெரு,
கீழ்பாக்கம்,
சென்னை – 600 010.

ந.க.எண்.1803/2017/செம3 நாள்:04.10.2018

அய்யா,

பொருள் : மனைப்பிரிவு - நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம், செங்கல்பட்டு மண்டலம், செங்கல்பட்டு - காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், பெருங்கோழி பேரூராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்: 210/1A,1B1; 211/5,6,7,8A,8B,8C,8D,9; 215/1,2,3; 216/1B; 217-ல் 9.48 ஏக்கர் குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதி வழங்க நன்னிலைத் தொகை செலுத்தக் கோருதல் சம்பந்தமாக.

:

1. மனுதாரர் திருமதி.எம்.வசந்தலட்சுமி, கடிதம் நாள்:30.05.2017.
2. அரசாணை எண். 138, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் :04.06.2004.
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றிக்கை ந.க.எண்:26337/2012/எல்ஏ2நாள்: 25.06.2015.
4. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் செயலாணைக் கடிதம், ந.க.எண்: 5766/2018/பிஏ2 நாள்:18.04.2018
5. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 14227/2017/சிபி நாள் : 14.12.2017

---------------

பார்வை(1)ல் சுட்டிய கடிதம் மூலம் பெறப்பட்ட மேற்காணும் பொருள் குறித்த உத்தேசத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட உள்ளது.

எனவே, பார்வை(2)ல் காணும் அரசாணையின்படி ரூ.50,100/- (ரூபாய் ஐந்தாயிரத்து நூறு மட்டும்) நன்னிலை வரி தொகையாக கீழ்கண்ட அரசுக் கணக்குத் தலைப்பில் செலுத்தி அதன் அசல் செலுத்துச் சீட்டினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**Head of Account :**

0217 Urban Development 03 Integrated Development
of Small and Medium Towns-800 other Receipts-
AA Director Of Town Planing – 27 Non-Taxation Fees
09 Collections DPC:0217 03 800 AA 2795

நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர்,
செங்கல்பட்டு மண்டலம்,
செங்கல்பட்டு.

VIGNESH REAL ESTATES
M. Mani
PARTNERS

Scanned by CamScanner